# மான்மின் செய்திகள்

Private Circulation மான்மின் செய்திகள் நெ.43

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St., Villivakkam, Chennai - 49, India. Tel : 044-43554542, Fax : 044-26172471, E-mail : indiajoseph@gmail.com


# "பரிசுத்த நற்செய்திக்கென்ற எதிர்பார்ப்புடன் கொரியாவிற்கு வந்தோம்"

## எம்.எம்.டி.சி-யின் உலகளாவிய மிஷனரி பயிற்சி நிகழ்ச்சியில் கலந்து கொள்ள 10 தேசங்களில் இருந்து பயிற்சியாளர்கள் வந்திருந்தனர்.




எம்.எம்.டி.சி உலகளாவிய மிஷனரி பயிற்சி நிகழ்ச்சியின் தொடக்க விழாவில் கலந்து கொண்டு, துவக்க உரையாற்றிய போதகரும், மான்மின் பயிற்சி மையத்தின் தலைவருமாகிய தெபோரா ரீய் அவர்கள் "இந்த பரிசுத்த நற்செய்தி நம்மை ஆவிக்குரிய நிலைக்கு அழைத்துச்சென்று, நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருக்கும் பாவத்தின் வேரற நம்மைச் சுத்திகரிக்கவும், நம்மை மாற்றிக்கொள்ளவும் உதவுகிறது. நீங்கள் ஒவ்வொருவரும் ஆவிக்குரிய போர்ச்சேவகர்களாய் மாறி, ஆத்துமாக்களை உயிர்ப்பிப்பதோடு மட்டுமல்லாமல், உங்கள் குடும்பம், உங்கள் மக்கள் மற்றும் உங்கள் தேசத்தை புதிய எருசலேமை நோக்கி வழிநடத்திச் செல்வீர்கள் என்று நான் நம்புகிறேன்" என்றார்.

அதன் பிறகு, அமெரிக்கா, இஸ்ரேல், ரஷ்யா, தாய்வான், வியட்னாம், கசகஸ்தான், நேபாள் மற்றும் இந்தோனேஷியா உள்ளிட்ட 10 நாடுகளில் இருந்து பயிற்சி பெற வந்திருந்த 40-க்கும் மேற்பட்ட பயிற்சியாளர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவர்களாய் "மான்மின்" என்று உணர்ச்சிப் பொங்கக் கூறினார்கள்.

மான்மின் தலைமை சபையானது தனது உலகளாவிய சுவிசேஷ தரிசனத்தை நிறைவேற்ற தன்னுடைய வேலையை முழு முயற்சியுடன் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்த தரிசனத்தை நிறைவேற்றவே இச்சபையானது எம்.எம்.டி.சி-யை நிறுவி, அதன் மூலம் மிஷனரிகளை பயிற்றுவித்து உலகமெங்கும் அனுப்பிக் கொண்டிருக்கிறது. வெளிநாடு கிளைச்சபை போதகர்கள் மற்றும் சபை பணியாளர்களின் தொடர்ச்சியான வேண்டுகோள்கள் அதிகரித்ததினால், ரெவ.லீ ஜேராக் அவர்களின் ஆவிக்குரிய செய்திகளால் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள விரும்பும் வெளிநாட்டு பயிற்சியாளர்களுக்கு ஞானத்தையும், திறனையும் வழங்கும்படியாய் இந்த உலகளாவிய மிஷனரி பயிற்சி நிகழ்ச்சியானது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மேலும், இவர்கள் திருச்சபையின் நிர்வாக முறை மற்றும் ஊழிய முறையையும் கற்றுக்கொள்கின்றனர்.

இத்திருச்சபையானது, 10,000-க்கும் மேற்பட்ட கிளைச்சபைகள் மற்றும் ஒருங்கிணைந்த சபைகளுடன், தன் உலகளாவிய திருச்சபையை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கும் இந்த சூழ்நிலையில், இது போன்ற நிகழ்ச்சிகள் மிகவும் அத்யாவசியமானதாகக் காணப்படுகிறது. பிப்ரவரி 27-ம் தேதி முதல், பயிற்சி பெற வந்திருந்தவர்கள், மிஷனரி குடியிருப்பு ஸ்தலங்களில் தங்க வைக்கப்பட்டார்கள். தினமும் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை இப்பயிற்சியாளர்கள் பயிற்றுவிக்கப்படுவார்கள். (திங்கள் அன்று இரவு 10 மணி வரை) மேலும், சனிக்கிழமையன்று மதியம் 3 மணி முதல் இரவு 10 மணி வரை பயிற்சியானது நடைபெறும். இவர்கள் மிகவும் இறுக்கமான நேர அட்டவணையை நிர்வகித்துக் கொண்டு, அனைத்து ஆராதனைகளில் பங்குபெறுவது மட்டுமல்லாமல், தினமும் நடைபெறும் தானியேல் ஜெபங்களிலும் கலந்து கொள்கிறார்கள்.

மான்மின் திருச்சபையின் போதகர் ஐக்கியத்தின் தலைவராகிய போதகர் சுஜின் லீ உள்ளிட்ட 20 தேவ ஊழியர்கள், சிலுவையின் செய்தி, 1கொரிந்தியர், லேவியராகமம், பரிசுத்த ஆவியின் வரங்கள் மற்றும் ஊழியம், வல்லமையும் பரிசுத்தமாகுதலும், சபை எழுப்புதலின் திறவுகோல்கள், ஏழு சபைகள், ஆராதனை, ஆலோசனை முறைமைகள், மிஷனரி தலைமைத்துவம், சர்வதேச ஆசாரம், நிதி நிர்வாகம் மற்றும் நிர்வாக முறைமைகள் இவைகளைப் பற்றி உரையாற்றினார்கள். மேலும், இவர்கள் பரிசுத்த ஆவியின் நிறைவோடு, ஜெபக்கூட்டங்களில் ஜெபித்தனர்.

கூடுதலாக, இவர்கள் பிரசங்கப் பயிற்சி, வேதவாசிப்பு, வேதவசன போட்டி, பரிசுத்த சுவிசேஷத்திற்கு சாரம்சமான அடிப்படையான செய்திகளையும் சுருக்கமாக எழுதி வைத்துக் கொண்டனர். மேலும் GCN TV உள்ளிட்ட சபையின் பல்வேறு துறைகளைப் பார்வையிட்டனர். கொரிய கலாச்சாரத்தைப் பற்றி நன்றாய் அறிந்து கொள்ள, சுற்றுலாவாசிகளுக்கு ஆர்வமூட்டக்கூடிய சில இடங்களுக்கும் அவர்கள் சென்றனர். மூவான் அற்புத தண்ணீர் ஸ்தலத்தில் பிப்ரவரி 23ம் தேதி அன்று நடைபெற்ற தொழிற்பயிற்சியிலும் கலந்து கொண்டனர்.

"நானும் என்னுடைய சபை பணியாளர்களும் இந்த நிகழ்ச்சிக்காக ஜெபத்தோடு ஆயத்தப்பட்டிருக்கிறோம். இந்த நிகழ்ச்சியின் மூலமாய் எதை நாங்கள் கற்றுக் கொள்ளப்போகிறோம் என்பதை குறித்து, எதிர்ப்பார்ப்புள்ளவர்களாய் இருக்கிறோம். தேவனின் உண்மையான ஊழியக்காரராகிய Dr.லீ அவர்களைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த வாய்ப்பின்மூலமாக ஆவிக்குரிய வாழ்க்கையில் அதிகமாக வளருவேன் என்று நம்புகிறேன்" என்று ஸ்பெயின் நாட்டிலிருந்து வந்திருந்த (பார்ஸிலோனாவில் உள்ள அல்.'. போரி மான்மின் திருச்சபை) போதகர். ஹென்றி பால் நெளபியர் கூறினார்.

சகோதரி நடின் மியாம்பா (சர்வதேச மான்மின் திருச்சபை, நியூயார்க்) கூறுகையில், "Dr.லீ அவர்களால் எழுதப்பட்ட புத்தகங்களின் மூலமாக பல ஆவிக்குரிய காரியங்களை உணர்ந்து கொண்டேன். அவருடைய 2006ம் ஆண்டு நியூயார்க்கில் நடைபெற்ற நற்செய்திக் கூட்டத்தின் மூலம் மிகவும் தொடப்பட்டேன். Dr.லீ அவர்களின் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கண்ட பிறகு, கொரியாவில் உள்ள மான்மின் தலைமை சபையைக் காணக்கூடிய வாய்ப்புக்காக ஆவலுடன் காத்திருந்தேன். தற்போது அந்த வாய்ப்பை பெற்று, நான் எல்லா நிகழ்ச்சிகளுக்காகவும், ஆவலுடன் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.





எம்.எம்.டி.சி-யின் உலகளாவிய பயிற்சி மையத்தின் நிகழ்ச்சிகள் புது அங்கத்தினர்கள் அறையில் நடைபெறுகிறது. அங்கு வழங்கப்படும் செய்திகள் அனைத்தும் ஆங்கிலத்திலும், சீன மொழியிலும் மொழிபெயர்க்கப்படுகிறது.

## MIS பாடவகுப்புகள் சைப்ரஸ் குடியரசிலும் ஆரம்பிக்கப்பட்டன

ஜனவரி 27ம் தேதியன்று, மான்மின் உலகளாவிய வேதப்பாடசாலையானது, சைப்ரஸ் குடியரசின் தலைநகரமாகிய நிகோசியாவில் போதகர் விரெட் ஷென் ரோசன் (லிவ்விங்ஸ்டோன் சர்ச், டெல் அவிவ், இஸ்ரேல்) அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

மேலும் இவள், சிலுவையின் செய்தி என்ற MIS பாடப்புத்தகத்திலிருந்து, ஒரு மாத அடிப்படையில், ஒரு வாரத்திற்கு ஆங்கிலத்தில் செய்தியை வழங்கினாள். இவ்வுரைகள் ரஷ்ய மற்றும் பல்கேரியன் மொழிகளிலும் மொழிப்பெயர்க்கப்பட்டது. எந்த செய்திகளும் இல்லாத சமயங்களில், மாணவர்கள் பாடப்புத்தகத்தினை தாங்களாகவே படிப்பர் அல்லது செய்தியாளர் உதவியுடன் மின்னஞ்சல் மூலமாகவோ, வீடியோ தொலைபேசி வழியாகவோ படிப்பர். "இச்செய்திகள் அனைத்தும் தேவனால் வழங்கப்பட்டவை என்று மாணவர்கள் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர். மேலும் சிலுவையில் பதிந்துள்ள ஆவிக்குரிய அர்த்தங்களை அறிந்து கொண்டு, அதன்மூலம் அவர்கள் மிகவும் ஆழமாய் அசைக்கப்பட்டவர்களாய் தோன்றினர்" என்று போதகர்.ரோசன் கூறினார்கள்.

# ஆண்டவர் மீண்டும் வருவார்

"அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள் அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்த காலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள். இவைகளெல்லாம் சம்பவிக்குமுன்னே இந்த சந்ததி ஒழிந்து போகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"
(மத்தேயு 24:32-34).

பாவத்திலும், சாபத்திலும் இருந்து மனுக்குலத்தை மீட்டெடுக்க சுமார் 2000-ம் ஆண்டுகளுக்கு முன்பு இயேசு இவ்வுலகத்தில் வந்தார். அவரிடத்தில் பாவமோ, பாவத்தின் கறையோ காணப்படாததினால் சிலுவையில் அறையப்பட்ட இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். அவர் உயிர்த்தெழுந்த பின்பு நான் மீண்டும் வந்து உங்களை என்னிடமாய் சேர்த்துக்கொள்வேன் என்று வாக்குத்தத்தம் பண்ணினார். அப்போஸ்தலர் 1:11-ல் கூறியுள்ளபடி, "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்" பிறகு நம் மணவாளனாகிய தேவன் வானத்தில் வரும் பொழுது என்ன நடக்கும்?

## 1. ஆகாயத்தில் ஆண்டவரின் வருகை இருக்கும்

இயேசு கிறிஸ்துவின் வருகையைத் தவிர, வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் அனைத்துத் தீர்க்கதரிசனங்களும் நிறைவேறியுள்ளது. இவற்றில் ஆண்டவருடைய வருகை, 7 வருட உபத்திரவக்காலம், 1000-ம் வருட அரசாட்சி, நியாயத்தீர்ப்பு நாள் ஆகியவை இன்னும் நடைபெற உள்ளது.

1தெசலோனிக்கேயர் 4:16,17- ல் வாசிப்பது போல், "ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்."

ஆண்டவர் ஆகாயத்தில் வரும்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது உயிர்த்தெழுவார்கள். வேதாகமத்தில் 1கொரிந்தியர் 15:20-ல் அவர்கள் "நித்திரையடைந்தவர்கள்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மண்ணில் புதைக்கப்பட்ட இவர்களுடைய சரீரங்கள் அழிவில்லாததாய் உயிர்ப்பிக்கப்பட்டு, ஆவியோடும் ஆத்துமாவோடும் இணைந்து உயிர்த்தெழுந்த சரீரங்களாக எடுத்துக்கொள்ளப்படும். பின்பு உயிரோடிருப்பவர்களும் இவர்களுடன் வானத்தில் இணைந்து, ஆண்டவரை சந்திக்கும்படி ஆகாயத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவர். இதுவே மறுரூபம்.

நம்முடைய மணவாளனாகிய ஆண்டவர் நம்மை சேர்த்துக்கொள்ள நிச்சயமாக மீண்டும் வருவார். வேதாகமத்தில் அவர் வாக்குப்பண்ணினபடியே, நம்மிடம் சீக்கிரமாய் வருவார். எபிரெயர் 10:37-ல் கூறியுள்ளபடி, "வருகிறவர் இன்னுங் கொஞ்சக்காலத்தில் வருவார், தாமதம்பண்ணார்." மேலும் வெளிப்படுத்தின விசேஷம் 3:11-ல், "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு" என்று கூறியுள்ளார்.

ஆனால் சில விசுவாசிகளும், உலக மக்களும் ஆண்டவருடைய இரண்டாம் வருகையைக் குறித்து சந்தேகிக்கின்றனர். ஆண்டவர் மீண்டும் வருவார் என்று விசுவாசிக்கிறவர்களை "இது காலயியல் மற்றும் மதத்திற்கு புறம்பான தீவிர செயல்" என்று சாடுகின்றனர். அவர்கள் எவ்வளவு தீவிரமாய் எதிர்த்தாலும் இது ஒரு பொருட்டல்ல, ஆண்டவர் நிச்சயமாய் வருவார். ஆகவே நாம் எச்சரிக்கையுடனும், சில மக்கள் கூட்டத்தினின்றும் விலகியிருக்க வேண்டும். அப்பேற்பட்ட மக்கள் யாரென்றால், "ஆண்டவர் இந்த வருடத்தில், இந்த மாதத்தில், இந்த நாளில், இந்த மணிநேரத்தில் வருவார்" என்று ஆண்டவருடைய வருகையினை நாள், மணி என்று கணித்து சொல்லுபவர்களே ஆவர்.

மத்தேயு 24:36-ன் படி, "அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்." வேதாகமத்தில் ஆண்டவருடைய வருகையை முன்னறிவிக்கும் கடைசிக்கால அடையாளங்கள் நாம் உணர்ந்து கொள்ளும்படி கூறப்பட்டுள்ளதே தவிர, ஆண்டவர் எந்த வருடத்தில், எந்த மாதத்தில், எந்த நாளில், எந்த மணிநேரத்தில் வருவார் என்று சொல்கின்ற வேத வசனமே இல்லை.



தலைமை போதகர்.டாக்டர்.லீ ஜேராக்

## 2. கடைசிக்காலத்திற்கான அடையாளங்கள்

மத்தேயு 24:3-ல் இயேசுவின் சீஷர்கள் அவரிடத்தில் வந்து, "இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள்." இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக சொன்னவைகள் தொடர்ச்சியான வசனங்கள் 5 முதல் 8ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது, "ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள். யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே; ஆனாலும், முடிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்." மேலும் 11 மற்றும் 12-ம் வசனங்களில், "அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள். அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்" என்று கூறினார். மேலும் 14-ம் வசனத்தின்படி, "ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்."

எப்படி இஸ்ரவேலர்கள் ஆண்டவருடைய வருகையின்போது மாற்றப்பட்டிருப்பார்கள் என்பதை, இஸ்ரவேலர்களை அத்திமரத்தோடு ஒப்பிட்டு இயேசு மத்தேயு 24:32-33-ல் பேசியிருக்கிறார். அந்த வசனங்கள் சொல்கிறது, "அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்".

அத்திமரத்தில் இளங்கிளை தோன்றி, துளிர்விடுவது என்பது இஸ்ரவேல் தேசத்தினுடைய சுதந்தரத்தோடு ஒப்பிடப்படுகிறது. இது இஸ்ரவேல் தேசம் உலக சரித்திரத்திலிருந்து மறைந்து, மீண்டும் நிறுவப்படுவதைக் குறிக்கிறது. எனவே, 'இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியவேண்டும்' என்பது இஸ்ரவேல் சுதந்திரமடையும்போது, ஆண்டவருடைய இரண்டாம் வருகையானது சமீபமாயிருக்கிறது என்று அர்த்தப்படுகிறது.

## 3.இஸ்ரவேல் மீண்டும் கட்டப்படுதல்.

கி.மு. 70-ம் நூற்றாண்டில் இஸ்ரவேல் ரோம அரசாங்கத்தால் அழிக்கப்பட்டது. மத்தேயு 24:2-ல் தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்டபடி, 'இவ்விடத்தில் ஒரு கல்லின் மேல் கல் இராதபடிக்கு இடிக்கப்பட்டுப்போகும்' என்கிற வேத வாக்கியம் நிறைவேறிற்று. இஸ்ரவேலின் ஜனங்கள் உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டனர். ரோம அதிகாரிகள் இடிக்கப்பட்ட ஆலயத்தின் ஒரு சில சுவர்களை மட்டும் வெற்றியின் சுவடுகளாய் விட்டுச் சென்றனர். அச்சுவர்களே இன்றும் நன்கு அறியப்பட்டிருக்கிற புலம்பலின் சுவர்கள்.

உலகமெங்கும் சிதறடிக்கப்பட்ட இஸ்ரவேல் ஜனங்கள் பல்வேறு விதமான இன்னல்களுக்கும் குற்றஞ் சாட்டப்படுதலுக்கும் ஆளாயினர். தோராயமாக 6 மில்லியனுக்கும் மேற்பட்ட ஐரோப்பிய யூதர்கள் இரண்டாம் உலகப்போரின் போது நாடுகடத்தப்பட்டனர் மற்றும் கொல்லப்பட்டனர். பல்வேறு விதமான சாபங்களுக்கும், இன்னல்களுக்கும் ஆளான யூதர்கள் தேவனை மறக்காமல் அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டனர். தேவனும் அவர்களை கைவிடாமல், பழைய ஏற்பாட்டில் தாம் வாக்குப்பண்ணினபடி அவர்களை மீண்டும் உயிர்ப்பிப்பார்.

எசேக்கியேல் 38:8-ல் "அநேக நாட்களுக்குப் பிற்பாடு நீ விசாரிக்கப்படுவாய்; பட்டயத்துக்கு நீங்கலாகி, பற்பல ஜனங்களிலிருந்து சேர்த்துக்கொள்ளப்பட்டு வந்தவர்களின் தேசத்தில் கடைசி வருஷங்களிலே வருவாய்; நெடுநாள் பாழாய்க்கிடந்து, பிற்பாடு ஜாதிகளிலிருந்து கொண்டு வரப்பட்டவர்கள் எல்லாரும் சுகத்தோடே குடியிருக்கும் இஸ்ரவேலின் மலைகளுக்கு விரோதமாய் வருவாய்; அவர்கள் எல்லாரும் அஞ்சாமல் குடியிருக்கும்போது, பெருங்காற்றைப்போல் எழும்பிவருவாய்" ஏசாயா 49:9-ல் "கட்டுண்டவர்களை நோக்கி: புறப்பட்டுப்போங்கள் என்றும்; இருளில் இருக்கிறவர்களை நோக்கி: வெளிப்படுங்கள் என்றும் சொல்லவும், நான் உம்மைக் காப்பாற்றி, உம்மை ஜனங்களுக்கு உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்: அவர்கள் வழியோரங்களிலே மேய்வார்கள்; சகல மேடுகளிலும் அவர்களுக்கு மேய்ச்சல் உண்டாயிருக்கும்." தாம் வாக்குப்பண்ணின நேரம் வந்ததினால், தேவன் இஸ்ரவேல் ஜனங்களை கூட்டிச்சேர்த்தார். அது 1948-ம் ஆண்டு மே மாதம் நடந்தேறியது. முற்றிலுமாய் சிதறடிக்கப்பட்ட தேசம் 1900 வருடங்களுக்குப் பிறகு, திரும்ப ஒரு தேசமாய் உருவெடுத்தது. உலக வரைபடத்தில் மிகச் சிறிய இடத்தைப் பெற்றுள்ள இஸ்ரவேல் தேசம் இன்று வளரும் நாடுகளில் ஒன்றாகி, உலகத்தின் கவனத்தைத் தன் பக்கமாய் ஈர்த்துள்ளது.

அத்திமரத்திலிருந்து அதிகமான இலைகள் துளிர்விடும்போது, நாம் வசந்த காலம் சமீபமாயிற்று என்று அறிகிறோம். இதைப் போல, இஸ்ரவேல் தேசம் சுதந்தரம் அடைந்து, வளரும் நாடுகளில் ஒன்றாகி இருப்பது, ஆண்டவருடைய இரண்டாம் வருகையானது மிகவும் சமீபத்தில் உள்ளது என்பதை நமக்கு உணரச்செய்கிறது. ஆகவே நாம் அதிக தீவிரமாய், அநேக ஆத்துமாக்களை இரட்சிப்புக்கு நேராய் வழிநடத்தி, ஒரு நல்ல கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ வேண்டும். அப்படிப்பட்ட விசுவாசிகளுக்கு, தேவனுடைய வருகையானது, ஒரு திருடன் இரவில் வருகிற விதமாய் வராது.

தேவனை நேசித்து, அவருடைய கற்பனைகளை கைக்கொள்கிற மற்றும் அவருடைய வருகைக்காக காத்திருக்கிற கோதுமை மணி போன்ற விசுவாசிகள் இயல்பாகவே தங்களை ஆண்டவருடைய மணவாட்டிகளாக அலங்கரிப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் கறை திரையற்ற ஆண்டவருடைய மணவாட்டிகளாய் மாறும் தகுதியை நிறைவேற்றுவதில் மாத்திரம் கவனம் செலுத்துவர்.

ஆனால் பரலோகம் நரகம் என்று இருப்பதை அறியாமல் இன்னும் அழிவின் பாதையை தெரிந்துகொண்டு, எதிரியாகிய பிசாசு மற்றும் சாத்தானின் அடிமைகளாய் வாழும் மக்கள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். இன்னும், இப்பேற்பட்டவர்கள் உலகத்துடன் சிநேகம் வைத்துக்கொண்டு, நோவா கால மக்களைப்போல இருக்கிறார்கள். நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள் வரைக்கும் ஜனங்கள் புசித்துக் குடித்தார்கள், பெண் கொண்டு கொடுத்தார்கள்; ஜலப்பிரளயம்வந்து எல்லாரையும் அழித்துப்போட்டது (லூக்கா 17:27). அவர்கள் இரட்சிப்பை பெற்றுக்கொண்டார்களா? இல்லை, அவர்கள் இரட்சிக்கப்படவில்லை.

வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ளபடி, கடைசிக்கால அடையாளங்களால் நிறைந்த இந்த நாட்களில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கடைசி காலமானது சமீபமாய் இருக்கிறது என்பதை உணர்ந்து, விழிப்புடன் ஜெபித்து ஆண்டவருடைய மணவாட்டியாய் உங்களை அலங்கரிப்பீர்களாக என்று நான் ஆண்டவருடைய நாமத்தினால் உங்களுக்காய் ஜெபிக்கிறேன்.


### விசுவாச அறிக்கை

1. மான்மின் மத்திய சபை, வேதாகமம் பரிபூரணமும், பிழையற்றதும், தேவனால் உச்சரிக்கப்பட்ட வார்த்தை என நம்புகிறது.
2. மான்மின் மத்திய சபை திருத்துவ தேவனின் ஒருங்கிணைந்த கிரியைகளை நம்புகிறது : பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்.
3. மான்மின் மத்திய சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என்று நம்புகிறது.
4. மான்மின் மத்திய சபை, இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.
5. மான்மின் மத்திய சபையின் உறுப்பினர்கள் கூடி வரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை, "அப்போஸ்தருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலம் அறிக்கை செய்து அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புகிறது.

"எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் (தேவன்)." அப்போஸ்தலர் (17:25)

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" அப்போஸ்தலர் (4:12)

மான்மின் சர்வதேச பாடசாலை
இந்திய வளாகம்
Manmin International Seminary - India campus belongs to the United Holiness Church of Korea of which the chairman of the board of directors is Rev.Dr. Jaerock Lee. It is based on the fivefold Holiness gospel: Regeneration, Sanctification, Divine Healing, Resurrection, and Return of Christ.
DIPLOMA IN CHRISTIAN MINISTRY
(One year correspondence programme)
15D/41, Ponnankinaru Street, Villivakkam, Chennai - 600 049.
Tel:044-43554542, Email : indiamis@gmail.com




கானான் தேசத்தை சுதந்தரித்தலின் வரலாறு, பகுதி (3)

## வனாந்திரத்தில் 40 வருட வாழ்க்கை

# கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கான ஆவிக்குரிய பயிற்சி

இஸ்ரவேலர்கள் விசுவாசத்தைப் பெறும்படியாக, மோசேயின் மூலமாய் தேவனுடைய வல்லமையை அவர்கள் கடினமான சூழ்நிலையை சந்தித்தபொழுது தேவன் காண்பித்தார். இது எதற்கென்றால், 'பாலும் தேனும் ஓடுகிற தேசமாகிய' கானானுக்குள் பிரவேசிப்பதற்கு ஏதோ மோசேயின் விசுவாசம் மாத்திரமல்ல, இஸ்ரவேலின் எல்லா புத்திரர்களுடைய விசுவாசமும் அவசியமாயிருந்தது.

### ◆ பிரயாணத்தை ஆரம்பித்த ஒரு வருடத்தில் இஸ்ரவேலர் காதேஸ் பாரானை அடைந்தனர்

யாத்திராகமத்தில் இஸ்ரவேல் புத்திரர் மோசேயின் தலைமையில் செங்கடலைக் கடந்து சென்றனர். சீனாய் மலையை அடைந்த அவர்கள் அங்கு தேவனோடு உடன்படிக்கை பண்ணி, தேவ கட்டளைகளைப் பெற்றுக்கொண்டு, அங்கு ஆசரிப்பு கூடாரத்தை அமைத்தார்கள். (யாத்திராகமம் 12-ம் அதிகாரம் முதல் 40-வது அதிகாரம் வரை). எண்ணாகமத்தில் எழுதியிருக்கிறபடி இஸ்ரவேல் புத்திரர் சீனாய் மலையை விட்டு, பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தை நோக்கிப் பிரயாணப்பட்டனர். பின்பு, இஸ்ரவேலர் தங்கள் ஜனத்தொகையை கணக்கிட்டு 12 கோத்திரங்களாகப் பிரிக்கப்பட்டனர். பின்பு, மோசே தேவனால் தங்களுக்கு கட்டளையிடப்பட்ட பஸ்காவை இஸ்ரவேலின் புத்திரர்களோடு ஆசரித்தார். தேவனுடைய மகிமையின் மேகம் கூடாரத்தை விட்டுப் புறப்படுகையில், அவர்களும் சீனாய் மலையை விட்டுப் புறப்பட்டனர் (எண்ணாகமம் 1-10 அதிகாரங்கள்).

இவையெல்லாவற்றிற்கும் முன்பு, இஸ்ரவேல் ஜனங்கள் தீமையான வார்த்தைகளினால் மோசேக்கு விரோதமாக முறுமுறுத்தனர். மன்னாவைத் தவிர தங்களுக்குப் புசிக்க ஒன்றுமில்லை என்று மோசேயிடம் முறையிட்டனர். மோசே இதைக் குறித்து தேவனிடம் ஜெபித்தபோது, தேவன் அவர்கள் புசிக்கக் காடைகளை அனுப்பினார். மேலும் அவர், மோசேயின் பாரத்தைக் குறைக்க உதவும்படி 70 மூப்பர்களையும் நியமித்தார். அந்த தருணத்தில் ஆரோனும், மிரியாமும் மோசே ஒரு புறஜாதி ஸ்திரியை விவாகம் செய்ததால், அவனுக்கு விரோதமாக முறுமுறுத்தனர். ஆனால் தேவனோ, என் தாசனாகிய மோசே அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன் என்று சாட்சி பகிர்ந்தார். எகிப்தை விட்டு வெளியேறிய ஓராண்டுக்குப் பிறகு, இப்படிப்பட்ட காரியங்களை அனுபவித்தவர்களாய், மோசேயும் இஸ்ரவேல் மக்களும் கானான் தேசத்திற்கான பிரயாணத்தின் ஆரம்பக் கட்டமாகிய காதேஸ் பாரானை சென்றடைந்தனர்.

### ◆ கானான் தேசத்தை வேவு பார்க்க சென்ற 12 வேவுக்காரர்களும், இஸ்ரவேலர்களின் முறுமுறுப்பும்.

எண்ணாகமம் 13-ம் அதிகாரம் இந்த வேவுக்காரர்களைப் பற்றிக் கூறுகிறது. தேவனுடைய சித்தத்தின்படி மோசே இந்த 12-பேரைத் தெரிந்துகொண்டு, கானான் தேசத்தை 40-நாளளவும் வேவு பார்க்க அனுப்பினான். இந்த 12 பேருக்கும் மெய்யாகவே கானான் தேசமானது பாலும், தேனும் ஓடுகிற தேசமாகக் காணப்பட்டது. ஆனால் கானானியரோ மிகவும் பெரியவர்களாகவும், பலமுள்ளவர்களாகவும், "இராட்சதர்கள்" என்று கிரேக்க மொழியில் அர்த்தப்படும் நெ.'.ப்லிம் என்ற கூட்டத்தைச் சார்ந்த ஆனாக்கின் குமாரர்களைப் போலவும் தோற்றமளித்தனர்.

எண்ணாகமம் 14ம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளபடி, அந்த 10- வேவுக்காரர்களின் அறிக்கையைக் கேட்ட இஸ்ரவேல் மக்கள், நம்பிக்கையை இழந்தவர்களாய் தங்களுடைய சத்தத்தை உயர்த்தி, அந்த இரவு முழுவதும், துயரப்பட்டு அழுது புலம்பினர்.

பன்னிருவரில் 10 வேவுக்காரர்கள் அச்சூழ்நிலையின் நிதர்சனத்தைக் கண்டு, சோர்ந்து போனார்கள். முடிவில், தங்களது அறிக்கையில் எதிர்மறையான வார்த்தைகளைப் பேசினர். கானானியர்கள் மிகவும் பலமுள்ளவர்களானதால், அவர்களை வீழ்த்தக்கூடிய வாய்ப்பு நமக்கு மிகவும் குறைவாக உள்ளது என்று வாதிட்டனர். ஆனால், யோசுவா, காலேப் ஆகிய இருவர் மட்டுமே தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, நேர்மறையாகப் பேசினார்கள்.

யோசுவாவும், காலேபும், "தேவன் நம்மோடிருக்கிறார், ஆகவே நாம் பயப்படவேண்டாம்" என்று கூறினார்கள். இதைக் கேட்ட இஸ்ரவேல் ஜனங்கள் அவர்களைக் கல்லெறிய வேண்டும் என்று கூறினார்கள்.

நூனின் குமாரனாகிய யோசுவாவும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும் தவிர முறுமுறுத்த இஸ்ரவேலரில் 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் யாரும் நாம் வாக்குப்பண்ணின கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கமாட்டார்கள் என்று தேவன் இஸ்ரவேலர்களிடம் கூறினார். தேவன் அவர்கள் வனாந்திரத்தில் 40வருடங்கள் வாழும்படியாக கட்டளையிட்டார். இந்த வனாந்திர வாழ்க்கையானது, முதலாம் தலைமுறையினருக்கு தேவன் விதித்த தண்டனையாகவும், இரண்டாம் தலைமுறைக்கு பயிற்சி பெறும் காலமாகவும் அமைந்தது.

### ◆ 12 வேவுக்காரர்களும் கானான் தேசத்தை வேவு பார்த்த பிறகு இஸ்ரவேலர் காதேஸ்-பாரானில் 38 வருடம் தங்கியிருந்தனர்.

இஸ்ரவேலரின் முதல் தலைமுறையினர் தேவனுக்கு முன்பாக முறுமுறுத்ததிலிருந்து, அவர்களால் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கக் கூடாமற்போயிற்று. அவர்கள் தண்டனை மற்றும் கஷ்டத்தை அனுபவித்த பிறகும், தங்களுடைய தீமையை அகற்றாதவர்களாய் இருந்தனர். அந்த வனாந்திர வாழ்க்கையில் சோர்வடைந்த சிலர், வேறொரு சம்பவத்திற்கும் ஆளாயினர். ரூபனின் மகன்களாகிய தாத்தான் மற்றும் அபிராமுடன் கைகோர்ந்த கோராகு, ஆரோன் ஒரு ஆசாரியனாய் இருப்பதை குறித்து மோசேக்கு விரோதமாக எழும்பினான். அதன் விளைவாக, அவர்களுக்கு கீழாக இருந்த நிலம் பிளந்து, பூமி தன் வாயைத் திறந்து, அவர்களையும் அவர்கள் வீடுகளையும், கோராகுக்குரிய எல்லா மனிதரையும், அவர்களுக்கு உண்டான சகல பொருள்களையும் விழுங்கிப்போட்டது. இவர்களுடன் மோசேக்கு விரோதமாக நின்ற 250 பேரும் அக்கினியால் பட்சிக்கப்பட்டனர் (எண்ணாகமம் 16).

எப்படியிருந்தாலும், கோராகு மற்றும் அவனுடைய கூட்டத்தினரின் மரணத்தைக் கண்டும், தேவனுடைய சித்தத்தை உணராமல் இஸ்ரவேலர்கள், "இந்த தேவ மக்களுடைய மரணத்திற்கு காரணம் நீர்தான்" என்று கூறி, மோசேக்கு விரோதமாக முறுமுறுத்தனர். வனாந்திரத்தில் சுற்றித்திரிகிற ஒரு தண்டனையைப் பெற்றும், அவர்களுடைய தீமையான இருதயத்திற்காக, இருதயத்தின் ஆழத்திலிருந்து, அவர்கள் மனந்திரும்பவில்லை என்பதை இது குறிக்கிறது. முடிவில், தங்களுடைய தீமையை அகற்றாதவர்களாய், தேவனுக்கு விரோதமாக எதிர்த்து நின்றதால், அவர்கள் நடுவே வாதையானது உருவானது. இந்த வாதையின் மூலம் இஸ்ரவேல் ஜனங்களில் 14 ஆயிரத்து 700 பேர் மரித்தனர்.

இதற்குப் பின்பு தேவன் மோசேயோடும், ஆரோனோடும் இருப்பதை, ஆரோனுடைய கோல் துளிர்ப்பதன்மூலம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு நிரூபித்தார். இச்சம்பவம் எண்ணாகமம் 17ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்ரவேலின் முதல் தலைமுறையினர் எப்பொழுதெல்லாம் கஷ்டத்தையும், துன்பத்தையும் அனுபவித்தனரோ, அப்பொழுதெல்லாம் தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்தனர். அதனால் கானான் தேசத்தை சுதந்தரிக்கும் அவர்களின் கடமைகளை அவர்கள் நிறைவேற்றவில்லை. அவர்கள் காதேஸ் பாரானில் 38 வருடங்கள் அலைந்து, திரிந்து மரித்தனர் (உபாகமம் 2:14).

### ◆ இஸ்ரவேலர்கள் மோவாப் என்னும் சமபூமிக்கு வந்தனர்

எண்ணாகமம் 21-ம் அதிகாரத்தில் கூறியுள்ளபடி, முடிவாக மோசே காதேஸ் பாரானிலிருந்து மோவாபின் சம பூமியை நோக்கிப் புறப்பட்டார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் எல்லை வழியாகச் செல்லக் கூடாதென்று ஏதோமின் இராஜா கூறினதினால் அவர்கள் ஏதோம் தேசத்தைச் சுற்றிச் சென்றனர். இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் பயணத்தின்நிமித்தம் பொறுமையை இழந்து, தேவனுக்கும், மோசேக்கும் விரோதமாக முறுமுறுத்தனர். அப்பொழுது கொள்ளிவாய் சர்ப்பங்கள் தோன்றி ஜனங்களைக் கடித்ததினால் அநேக இஸ்ரவேல் ஜனங்கள் மரித்தனர். மேலும் பலர் மரிக்கும் தருவாயில் மனந்திரும்பி, எங்களுக்காக தேவனிடம் வேண்டிக் கொள்ளும் என்று மோசேயிடம் முறையிட்டனர். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி, வெண்கலத்தில் ஒரு சர்ப்பத்தை செய்து, அதைத் தூக்கி வை என்றார். அந்த வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்த ஜனங்கள் பிழைத்தனர். சந்தேகப்பட்டு, அதைப் பார்க்க மறுத்தவர்கள் மாண்டனர்.

மோசேயை தங்கள் தலைவராகக் கொண்டு, இஸ்ரவேலர்கள் யோர்தானின் கிழக்கே வாழ்ந்த பாசானின் ராஜாவாகிய ஓக், அம்மோனியரின் ராஜாவாகிய சீகோனை வென்று கானான் தேசத்தைக் கைப்பற்றினர். இஸ்ரவேல் மக்களைக் கண்டு பயந்த மோவாபின் ராஜாவாகிய பாலாக், பெதோரில் வாழ்ந்த பிலேயாம் என்ற தீர்க்கதரிசியை அழைத்து இஸ்ரவேலரை சபிக்கும்படி கூறினான். பிலேயாம், மோவாபின் ராஜாவின் வற்புறுத்துதலின் நிமித்தமும், அவன் வாக்குப்பண்ணின வெகுமதிகளினிமித்தமும் சோதிக்கப்பட்டு, ராஜாவை எச்சரிக்கை செய்தான். அதன் விளைவாக, இஸ்ரவேலர் இடறி, விக்கிரகங்களுக்கு முன்பாகப் பணிந்து அவைகளுக்கு படைக்கப்பட்டவைகளைப் புசித்தனர். இதன் விளைவாக தேவன் ஒரு வாதையை அனுப்பினார். இந்த வாதையின் மூலம் 24,000 பேர் இறந்தனர்.

இஸ்ரவேலரின் 40 வருட வனாந்திர வாழ்க்கையின் இறுதியில் இந்த பிலேயாமின் சம்பவம் நடைபெற்றது. இஸ்ரவேலர் தேவனுடைய வல்லமையைக் கண்டும், தொடர்ச்சியாய் அவருடைய வார்த்தையை அறிந்தும், விக்கிரகங்களைப் பணிந்து கொண்டனர். இதேபோல், நாமும் முழுமையாக சுத்திகரிக்கப்படுவதற்கு முன்பதாக, நீண்ட நாள் கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்து, வெகுநாள் விசுவாசத்தில் நிலைத்திருப்பதுபோல் இருந்தாலும், இவ்வுலகத்தால் சோதிக்கப்பட்டுவிடுகிறோம். ஆகவே, நாம் உலகத்தால் மேற்கொள்ளப்படக்கூடாதபடிக்கு, எப்பொழுதும் ஆவியில் விழிப்புடன் இருக்க வேண்டும்.

### ◆ கானானுக்கு வெளியே மோசேயினால் போதிக்கப்பட்ட கடைசிப் பிரசங்கம்

எண்ணாகமம் 26 மற்றும் 27-ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மோசே இரண்டாம் முறை கணக்கெடுப்பை நடத்தினான். 40 ஆண்டுகளின் முடிவில் இஸ்ரவேலர் கானானுக்குள் பிரவேசித்தபொழுது, யோசுவா அவர்களுக்கு தலைமைத்துவத்தை ஏற்றான். அப்பொழுது கானானை சுதந்தரித்த இஸ்ரவேலின் இரண்டாம் தலைமுறையினருக்கு தன்னுடைய இறுதி ஆலோசனைகளை மோசே கூறினான். அப்பொழுது, முதலாம் தலைமுறையினர் கானானுக்குள் பிரவேசிக்க முடியாமல் போனதற்கு அவர்களுடைய கீழ்ப்படியாமையே காரணம் என்று முக்கியப்படுத்தி கூறினார். பின்னர் கீழ்ப்படிதலே ஆசீர்வாதத்தை நோக்கிச்செல்லும் வழி என்றும், அதுவே நம்மேல் விழுந்த கடமை என்றும் மோசே கூறினார்.

மோசேயின் கடைசி வார்த்தைகள் அனைத்தும் எண்ணாகமம் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இறுதியாக, மோசே தன்னுடைய 120 வயதில் தனது கடைசி மூச்சினை விட்டார்.

# “தேவனுடைய அன்பையும் வல்லமையையும் அனுபவித்தபின் என் உள்ளம் சந்தோஷத்தால் நிறைந்திருக்கிறது”

**மூத்தகண்காணி, மியாங்சூன் கிம்** [வயது 61, சுங்ச்சொன் மான்மின் சபை]



மூத்தகண்காணி மியாங்சூன் கிம் அவர்கள் தன்னுடைய வயதினை மறந்தவளாய் தேவனுடைய அன்பினால் நிரப்பப்பட்டிருக்கிறாள்

தேவனுடைய அன்பினாலும், கிருபையினாலும், சமீபக்காலமாக என் வாழ்க்கை சந்தோஷத்தினால் நிறைந்திருக்கிறது. நான் 8-ம் வகுப்பு படிக்கும் போதே அந்நிய பாஷையில் பேசும் வரத்தைப் பெற்றிருந்தேன். ஒரு பணித்தள பள்ளியில் படித்து பட்டம் பெற்றிருந்தாலும், வெகு காலமாக நான் ஆலயத்திற்கு செல்வதை தவிர்த்து வந்தேன்.

என் வாழ்வில் உண்மையான விசுவாசத்தை நான் அறிந்து கொள்ள உதவிய பொருட்கள் Dr. லீ ஜேராக் அவர்களின் செய்தி ஒலிநாடாக்கள், அவர் புத்தகங்கள் மற்றும் மான்மின் செய்திகள் தான். இவை அனைத்தும் சீயோல் பட்டணத்தில் வசிக்கும் என்னுடைய மைத்துனி, மூத்தகண்காணி ஹெஜாபார்க் அவர்களால் அவ்வப்போது எனக்கு வழங்கப்பட்டது. இதற்கிடையே சுங்ச்சொன் மான்மின் சபை போதகர். டொன்ங்யொன் கிம்-மை, ஒரு கார் பழுதுப்பார்க்கும் கடையில் சந்தித்துப் பேச எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அவருடன் பேசிய பிற்பாடு, ஆண்டவரையும், தேவனுடைய அன்பையும் குறித்து அதிக ஆழமாய் என்னால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

### தேவனைப் பிரதிபலிப்பதே கிறிஸ்தவ வாழ்க்கை

2010-ம் ஆண்டில் சுங்ச்சொன் மான்மின் சபையில் வழங்கப்பட்ட செய்தி தொடர்களை கேட்ட பிறகு, தேவனைப் பிரதிபலிப்பதுதான் கிறிஸ்தவ வாழ்க்கையின் முக்கியம் என்பதை அறிந்து கொண்டேன். என் வாழ்வில் எவ்விதத்திலும் நான் யாருக்கும் தீங்கு நினைத்ததில்லை என்றும் மற்றவர்களுக்கு சேவை செய்வதின்மூலம் நான் நன்மையை மட்டுமே செய்து வருகிறேன் என்றும் நினைத்தேன். மேலும், என்னில் பாவம் ஒன்றும் இல்லை என்றும் நான் விசுவாசித்தேன். ஆனால் இப்பிரசங்கங்களைக் கேட்ட பிறகுதான், என்னுள் இருந்த உண்மையில்லா இருதயத்தின் வேறே உருவங்களான ஆணவம், பெருமை, தீய எண்ணம் முதலியவற்றை கண்டறிந்தேன். ஆகவே, கண்ணீருடன் மனந்திரும்பினேன்.

அதே நேரத்தில், தேவனுடைய இணையற்ற அன்பை என்னால் உணர முடிந்தது. ஏப்ரல் 2011-ஆம் ஆண்டு, தொடர்ந்து மூன்று வாரங்களாக என்னால் என் இடது கையைப் பயன்படுத்தக் கூடாமல், மிகுந்த வேதனையால் துடித்தேன். நான் இடது கை பயன்படுத்துபவரானதாலும், ஒரு அழகு நிலையத்தை நடத்தி வருவதாலும் இடது கையானது அவசியமானதாயிருந்தது. ஆனால் அது என்னால் கூடாமல் போயிற்று. சமையலிலும் என் கணவரே எனக்கு உதவி வந்தார்.

சரியான நேரத்தில், என் சபை உறுப்பினருடன், Dr.லீ ஜேராக் அவர்களை சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். அவருடைய ஜெபத்தையும் பெற்றுக்கொண்டேன். மறுநாள் அடிப்பிடித்த சாதத்தின் ஒரு துண்டை எடுத்து வாயில் போட்டேன். அப்பொழுது மிளகுத்தூள் போன்ற வாசனை என் மூக்கைத் துளைத்தது.

“இந்த வாசனை எங்கிருந்து வருகிறது?” என்று எனக்குள்ளாகவே யோசித்தேன். அத்தருணத்தில் தானே, இரு ஒளிக்கதிர்கள் போன்ற ஒன்று என் இடது மணிக்கட்டுக்குள் நுழைந்தது. என் இடது தோள் பட்டையின்கீழ் நனைந்த மேகம் போன்ற ஒன்றையும் நான் கண்டேன். அது பார்ப்பதற்கு, விசித்திரமான மற்றும் ஆச்சரியமானதாக இருந்தது. மேலும், அன்று முதல் என் இடது கையை தடையின்றி பயன்படுத்தி என்னால் செய்ய முடியாமல் தவித்த அத்தனைக் காரியங்களையும் செய்தேன்.

அன்று முதல், அதிகமதிகமாக, தேவ கிருபையினால் என் வாழ்க்கை நிரப்பப்பட்டது. ஜீன் மாதத்தில் என் இரண்டாம் விரலில் இருந்த வீக்கமும் மறைந்துபோனது. ஜீலை மாதத்தில், தலைமைத்துவ கருத்தரங்கில் கலந்துக்கொண்ட போது என் கைபேசியில் நான் எடுத்த அரோரா வெளிச்சத்தின் மூலமாக தேவனுடைய அன்பை முழுவதுமாக அறிந்துக்கொண்டேன். ஆகஸ்டு மாதத்தில் எண்ணுக்கடங்கா தட்டாம்பூச்சிகள் வானத்திலிருந்து இறங்கி, என்மீதும் மான்மின் அங்கத்தினர்மீதும் உட்காருவதைக் கண்டு பூரித்தேன். அவை அனைத்தும் ஆச்சரியமாகவும், விவரிக்க முடியாத சந்தோஷமான அனுபவமாகவும் இருந்தது.

### சுவிசேஷத்தின் திரள் கனிகள்

நான் அனுபவித்த தேவனுடைய பலத்த செய்கைகளை, சாட்சியாக அறிவிக்க ஆரம்பித்தேன், அதன் தொடர்ச்சியாக 10-ற்கும் மேற்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும் வாய்ப்பைப் பெற்றேன். சுவிசேஷத்தை அறிந்துக் கொண்ட அனைவரும், சபை மக்கள், தங்கள் குடும்பத்தில் ஒருவர்போல் உள்ளனர் என்று சந்தோஷத்துடன் கூறினர்.

குறிப்பாக, சகோதரி.சோயெங்ஃபே, Dr.லீ - அவர்களால் எழுதப்பட்ட “மரணத்திற்கு முன்னே நித்திய வாழ்வை ருசித்தல்” என்ற புத்தகத்தின் மூலம் மிகுந்த கிருபையைப் பெற்றுக் கொண்டார்கள். பிறகு, Dr.லீ அவர்களால் ஜெபித்துத் தரப்பட்ட கைக்குட்டையின் வாயிலாக, போதகர்.டொன்ங்யொன் கிம்-மிடமிருந்து ஜெபத்தைப் பெற்றுக்கொண்டாள் (அப்போஸ்தலர் 19:11-12). ஏற்கனவே கற்பப்பை நீக்கு அறுவை சிகிச்சை மூலம் ஏற்பட்ட பின்விளைவுகளான வலி மற்றும் வயிற்றின் அடிப்பகுதியில் சூடுண்டாவது போன்ற உணர்வானது முற்றிலுமாய் நீங்கிப்போனது என்றும், எல்லா விதமான குடல் அழற்சியிலிருந்தும் சுகம் பெற்றுக்கொண்டதாகவும் அவள் சாட்சி பகிர்ந்தாள்.

கடந்த ஆண்டின் இறுதியில், நான் சிறந்த சிறுகுழுத் தலைவருக்கான பரிசை பெற்றுக்கொண்டேன். மேலும், இந்த ஆண்டில் துணை மாவட்டத்தலைவராகவும் நியமிக்கப்பட்டேன்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக தேவனைப் பிரதிபலிக்கவும், மத்தேயு 11:12ல் கூறப்பட்டபடி பலவந்தம் பண்ணியாகிலும், பரலோக இராஜ்ஜியத்தில் சிறந்த இடத்தைப் பிடிக்கவும் நான் கடினமாய் முயற்சிக்கிறேன். சந்தோஷமும் நன்றி அறிதலும் என் இதயத்தை நிறைத்திருக்கிறது. நான் சந்தித்த இந்த தேவனின் அன்பை அதிகதிகமான மக்களுக்கு தெரிவிக்கும்படியாய் ஜெபிக்கிறேன்

**சகோதரர் ஜான் பாபு** [வயது 34, இந்திய சுவிசேஷ திருச்சபை]

## “ மலட்டுத்தன்மையால் வேதனைப்பட்ட நானும் என் மனைவியும் இன்று எங்கள் செல்ல மகள் எருசி’ □யின் வரவால் இன்பத்தில் திளைத்துப்போயிருக்கிறோம் ”



போதகர். ஜோசப் ஹான், அவர்களால் நடத்தப்பட்டு வரும் சென்னை மான்மின் சபைக்காக கடந்த நான்கு ஆண்டுகளாக வேலைப்புரிந்து வருகிறேன். நான் சபையில் மின்சாரம் மற்றும் தண்ணீர் குழாய் பராமரிப்பு போன்ற வேலைகளைச் செய்தேன். அப்படி அங்கு வேலை செய்துக்கொண்டிருக்கையில், சபையின் அங்கத்தினர் பலர் அனுபவித்த அற்புதங்களைப் பற்றி கேட்டறிந்தேன்.

அவற்றில், சகோதரி.ரோசலின் மற்றும் சகோதரர் முலா அவர்களின் சாட்சி என்னை மிகவும் கவர்ந்தது. அவர்கள் நவம்பர் 2008-ம் ஆண்டு, போதகர்.மிக்-யூங் லீ அவர்களால் நடத்தப்பட்ட சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்துக்கொண்டு கருத்தரித்து, பிள்ளைப்பெற்றனர். அவர்களது சாட்சி, எனக்கும் என் மனைவிக்கும் நம்பிக்கை அளித்தது.

ஏனென்றால், பிப்ரவரி 2004-ஆம் ஆண்டு திருமணம் நடந்தும், நாங்கள் குழந்தையின்றி தவித்தோம். மேலும், இப்படி மலட்டுத்தன்மையால் பாதிக்கப்பட்ட வேறுசில விசுவாசிகளும், தேவனுடைய வல்லமையான ஊழியர் Dr.லீ ஜேராக் அவர்கள் ஜெபத்தினால் பிள்ளை பேறு பெற்ற பல நிகழ்வுகளைக் குறித்தும் கேட்டறிந்தேன்.

இது என் விசுவாசத்தைப் பெருகச் செய்ய காரணமாயிருந்தது. “தேவன் நமக்கு ஒரு குழந்தையை கொடுப்பார்” என்று நாங்கள் விசுவாசித்துடன் அறிக்கையிட்டோம். சபைக்காக வேலை செய்யும் போது எனக்கடுத்த காரியமோ, சம்பள உயர்வு போன்ற காரியத்தையோ நான் எதிர்ப்பார்க்காமல் என் முழு இருதயத்தோடும், அர்ப்பணிப்போடும் வேலை செய்தேன்.

இறுதியாக, 2010-ஆம் ஆண்டு, ஒரு சந்தோஷமான செய்தியைக் கேள்விப்பட்டேன். அது என்னவென்றால், மான்மின் ஜெப மையத்தின் தலைவரான திருமதி. போக்நிம் லீ அவர்கள் டிசம்பர் மாதம் நடைப்பெறும் சுகமளிக்கும் கூட்டத்தை நடத்துவதற்காக சென்னை மான்மின் சபைக்கு வருகிறார் என்பதே. நான் வேறாரு சபையின் அங்கத்தினராக இருந்தாலும், இந்த கூட்டத்திற்கென்று முழு மனதுடன் தயார் செய்து என் குடும்பத்தோடும், நண்பர்களோடும், அக்கூட்டத்தில் கலந்துக்கொண்டேன்.

முடிவாக, திருமதி.லீ அவர்களின் ஜெபத்தை அக்கூட்டததில் பெற்றுக்கொண்டோம். பிறகு, பிப்ரவரி 14,2011 அன்று என் மனைவி கற்பந்தரித்தாள். நவம்பர் மாதம் 23-ஆம் நாள் அன்று, என் மனைவி 6.8 பவுண்ட் எடையுள்ள, ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுத்தாள். இறுதியாக, ஒரு அழகான பெண் குழந்தையை பெற்றுக் கொண்டோம். அல்லேலூயா!

Now You can Watch
Rev. Dr. Jaerock Lee's
Program On
Arulvaakku GCN TV
@ all over Puducherry.
www.gcntv.org

MANMIN BIBLE COLLEGE
(Manmin International Seminary - India Campus)
15D/41, Ponnankinaru Street,
Villivakkam, Chennai - 600049
Tel: 044-43554542
E-mail: indiamis@gmail.com

Landmark for
Chennai Manmin
Holiness Church
15D/41, Ponnankinaru Street,
Villivakkam, Chennai - 600049
Tel: 044-43554542

